**செய்தி வெளியீடு எண்:128** **நாள் : 27.03.2015**

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம்
## ஊடகவியல் மாணவர்களுக்கான
## குறும்படப் போட்டி

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான நெறியாள்கையால் தமிழ் வளர்ச்சிக்குப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள், தரமணி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட இருக்கும் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம் குறிப்பிடத் தக்கதாகும்.

பண்டைக்காலத் தமிழர்கள் தொழில், வணிகம், அறிவியல், மருத்துவம் உள்பட பல்வேறு துறைகளில் உலகுக்கே வழிகாட்டும் வகையில் செயல்பட்டுவந்தனர் என்பதை இக்காலச் சமூகம் அறிந்து கொள்ளும் நோக்கத்தில் இந்தப் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம் அமைக்கப்படுகிறது.

இதன் மையப் பொருண்மைகளாக தமிழினத்தின் தோற்றம், ஆட்சித்திறன், வேளாண் தொழில்நுட்பம், நெசவு, உலோகவியல், கட்டுமானம், மருத்துவம், வானியல், போரியல், நீர் மேலாண்மை, விளையாட்டுகள், கலைகள், வாணிகம், பண்பாடு ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டு இக்காட்சிக் கூடம் உருவாகி வருகிறது.

இக்காட்சிக் கூடத்தைக் காண வரும் பார்வையாளர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் குறும்படங்களைத் தயாரிப்பது தொடர்பாக ஊடகவியல், காட்சி ஊடகவியல் மாணவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் போட்டி ஒன்றை முதல் முறையாக நடத்தத் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, திரைப்படக் கல்லூரிகள், ஊடகத் தொடர்பியல், காட்சி ஊடகவியல் துறை கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்கலாம்.

போட்டியில் பங்கேற்கும் படைப்புகளில் திரைக்காட்சி உரை (Script) முதலில் அனுப்பப்படவேண்டும். அவற்றைக் குழு ஆய்வு செய்து, தகுதியான படைப்புகள் அறிவிக்கப்படும். அவற்றைக் குறும்படங்களாகப் படம் எடுத்து, குறுந்தகடாக அனுப்ப வேண்டும்.

அவற்றில் சிறந்த மூன்று படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் பரிசாக ரூ. 5 இலட்சம், இரண்டாம் பரிசாக ரூ. 3 இலட்சம், மூன்றாம் பரிசாக ரூ. 2 இலட்சம் வழங்கப்படும். போட்டியில் பங்கேற்போருக்குச் சான்றிதழும் வழங்கப்படும்.

ஒவ்வொரு படமும் தலா 15 மணித்துளிகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

போட்டிக்கான திரைக்காட்சி உரைகள், குறிப்பிட்ட மாணவரின் முகவரி, மின்னஞ்சல், கைபேசி எண் ஆகிய விவரங்களை 15.04.2015—க்குள் நிறுவனத்துக்கு வந்து சேரும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும்.

**இது தொடர்பான விவரங்களுக்கு :**

முனைவர் ஆ.மணவழகன், இணைப் பேராசிரியர்
பொறுப்பாளர், பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை 600 113
தொடர்பு எண்: +91 9789016815

மின்னஞ்சல்: tamilmano77@gmail.com
வலைதளம்: www.ulakaththamizh.org

முனைவர் கோ.விசயராகவன்
இயக்குநர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**